# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 23 | 06-04-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 47



வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும்
- தரமான முறையில்
- கணினி முறையில்
- குறித்த தவணையில்

செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம். யாழ். சாலை, கிளிநொச்சி


## மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்பே அரசியல் தீர்வு குறித்துப் பேச விரும்புகின்றோம்

### 'தமிழ் அலை' வார இதழ் வெளியீட்டில் தளபதி கருணா

(மட்டக்களப்பு)

அடுத்த சுற்றுப்பேச்சுவார்த்தையில் சிறிலங்கா அரசு அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாகப் பேசவேண்டும் என்று தெரிவிக்கின்றது.

உதவி வழங்கும் நாடுகள் இதனை ஒரு நிபந்தனையாக முன் வைப்பதாலேயே சிறிலங்கா அரசும் இதனை விரும்புவது போல் தெரிகிறது. ஆனால் மக்களின் அவலங்கள் நீங்கி மீளக் குடியமர்ந்து இயல்பு நிலை எட்டப்பட்டபின்பே அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசலாம் என்ற கருத்தினைக் கொண்டிருக்கின்றோம் என விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள் தெரிவித்தார். மட்டக்களப்பு - கொக்கட்டிச் சோலையில் நேற்று 'தமிழ் அலை' வார இதழ் வெளியீட்டு விழா மற்றும் நித்தி பதிப்பகத் திறப்பு விழா என்பன காலை 10.30 மணிக்கு ஆரம்பித்து சிறப்புற நடைபெற்றது. இதில் மட்டு -அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி றமேஸ் பொதுச்சுடரினை ஏற்ற, மகளிர் தளபதி நிலாவினி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். நித்தி பதிப்பகத்தை மூத்த தளபதி கேணல் கருணா திறந்துவைத்தார். பத்திரிகையா

(08ஆம் பக்கம் பார்க்க)



'தமிழ் அலை' வாரப்பத்திரிகை முதல் பிரதியை கௌசல்யன் கேணல் கருணாவுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பாக்தாத் நகரைச் சூழக் கடும் சண்டை

# நகருக்குள் நுழைந்ததாக அமெ. அறிவிப்பு



நேற்று பாக்தாத் நகர வீதியில் ஈராக்கிய டாங்கி சென்று கொண்டிருக்கையில்...

## நுழைந்ததற்கான அறிகுறிகள் இல்லையென பி.பி.ஸி. செய்தியாளர் அறிவிப்பு

(லண்டன்)

**பாக்தாத் நகரத்தைச்சூழ அமெரிக்கப்படைகளுக்கும் ஈராக் படைகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம் பெற்றுவருவதாகஅமெரிக்கப் படைகளுடன் பயணிக்கும் பி.பி.ஸி.செய்தியாளர் தெரிவிக்கின்றார். இதேவேளை,பாக்தாத் நகரத்திற்குள் அமெரிக்கப்படைகள் ஊடுருவியுள்ளதாக அமெரிக்கப்படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.**

பாத்தாத் நகர் மீது கடந்த பல நாட்களாக ஏவுகணை மற்றும் விமானத்தாக்குதலையும் நடத்திவந்த அமெரிக்கப்படையினர் நேற்று இரவு பாக்தாத் நகருக்குள் நுழைந்ததாகவும், ஈராக் குடியரசுப் படையின் தலைமையகம் ஒன்றைக்கைப்பற்றியதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அமெரிக்க துருப்புக்கள் பாக்தாத் நகருக்குள் நுழைந்து விட்டன என்பதை ஈராக் தகவல்துறைஅமைச்சகம் மறுத்துள்ளது.

உண்மை எதுவென்று சொல்ல முடியாத அளவிற்கு ஈராக் யுத்தத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயில் பல அமைப்புக்களை புலிகளின் அரசியல் குழு பார்வையிட்டது

தற்போது நோர்வேயில் தங்கியிருக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழு நோர்வேயில் கடைப்பிடிக்கப்படும் சமஷ்டி முறை குறித்து ஆராய்ந்து வருகிறது. அது தனது விஜயத்தின் முதல் நாளில் நோர்வே வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் விதார் ஹெல்கேசனினால் வரவேற்கப்பட்டது. இதன்போது நோர்வே சிறப்புத்தூதுவர் எரிக் சொல்கெய்ம், ஒஸ்லோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆனோட்றெல்பீற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா பயணம்!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுநாளை புதுடில்லிக்குச் செல்லவுள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் சமாதான முயற்சிகள் மற்றும் சர்வதேச பிராந்திய விவகாரங்கள் குறித்து சனாதிபதி சந்திரிகா

(08ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏ-9 வீதி போக்குவரத்திற்கு திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

இன்று முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏ-9 வீதி மன்னார் - உயிலங்குளம் வீதிஆகியன போக்குவரத்திற்கு திறக்கப்படும். முகமாலை, ஓமந்தை சோதனைச் சாவடிகள் வழமையான நேரத்திற்கும் உயிலங்குளம் சோதனைச் சாவடி காலை 8.30 மணிக்கும் திறக்கப்படவுள்ளது. (லோ)

## வாசகர்களுக்கு...

ஈழநாதம் பத்திரிகை கடந்த பல மாதங்களாக கணினி முறையில் வடிவமைக்கப்பட்டு மறுதோன்றி (Offset) முறையில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றமை நீங்கள் அறிந்ததே. இவ்வாறு பல மாற்றங்களுடன் அதிக பக்கங்களுடன் இப்பத்திரிகையை வெளியிட்டு வருகின்றபோதிலும் அதன் விலையில் அதிகரிப்புச் செய்யப்படவில்லை. பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வாசகர்களுக்கு நாம் முன்னைய விலையிலேயே அதனை வழங்கி வந்தோம். இப்பொழுது தவிர்க்க முடியாத காரணங்களினால் பத்திரிகையின் விலையை ஒரு ரூபாவால் அதிகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந் நிலையில் வாசகர்களாகிய உங்களின் ஆதரவு என்றும் போல் தொடர்ந்தும் கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

நன்றி

நிர்வாகம்

### பெண்கள் விவகாரங்களுக்கான இரண்டாவது உபகுழுக் கூட்டம்

## சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான பணிகள் பற்றி தீவிரமாக ஆராயப்பட்டது



### தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி

பெண்கள் விவகாரங்களுக்கான இரண்டாவது உபகுழுக் கூட்டத்தில் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இச் சமாதான நடவடிக்கையினை கட்டியெழுப்புவதற்கான பணிகள் எவையெனவும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டப் பணிகள் இத்திட்டத்தில் பெண்கள் தொடர்பான விடயங்கள் எப்படி உள்ளடக்குவது போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இவ்வாறு நேற்று பிப 4 மணிக்கு புலிகளின் சமாதானச் செயலகத்தில் பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இரண்டாவது உபகுழுக் கூட்டத்தின் செயலமர்வு குறித்து தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி அவர்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

# பொலிசாரைத் தாக்கிய காடையர் சந்தேக நபர்களைக் கடத்த முயற்சி

(கொழும்பு)

வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை புகுந்த காடையர் குழுவொன்று காவல் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரி மீது தாக்குதல் நடத்தி விட்டு பொலிஸ் பாதுகாப்பில் இருந்த சந்தேக நபர்களை மீட்டுச் செல்லமுயன்ற போது பொலிசார் மடக்கிப்பிடித்து தாக்குதலை முறியடித்துள்ளனர்.

பத்துப் பேர் அடங்கிய இந்தக் காடையர் குழுவினர் பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவில் இருந்த பொலிசாரை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காடையர் குழுவில் மூன்று பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கைக்கென நெதர்லாந்து உதவித்திட்டம் அறிவிப்பு

நெதர்லாந்து அரசாங்கம் இலங்கைக்கென பொருளாதார அபிவிருத்தித் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது. களுத்துறையில் வர்த்தக கைத்தொழில்துறை கண்காட்சி ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நெதர்லாந்துத் தூதுவர் சுஜானா பிளைக்பாத் இலங்கையில் சமாதானத்தையும், சுற்றாடல் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்தி தனியார் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே உதவித்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.




## நடத்துநர் பணி நேர்முகத் தேர்வு

தமிழீழப் போக்குவரவுக் கழகம்

தமிழீழப் போக்குவரவுக்கழக நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத் தேர்வு 09 – 04 – 2003, 10 – 04 – 2003ஆம் நாள் புதன், வியாழன் காலை 10.00 மணி தொடக்கம் பகல் 03.00 மணிவரை தமிழீழப் போக்கு வரவுக் கழகம் – பேருந்துப்பகுதி – புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு :
**09-04-2003, 10-04-2003 ஆம் நாள் புதன், வியாழன் ஆகும். சனி, ஞாயிறு என 04-04-2003, 05-04-2003 நாளேடுகளில் நாளிட்டது தவறானதாகும்.**

**முகாமையாளர்,**
**ஆளணி ஆளுகைப்பகுதி,**
**தமிழீழப் போக்குவரவுக்கழகம்,**
**நடுவப்பணிமனை , விசுவமடு.**

(சி-8058)





## உலகத்தரம் வாய்ந்த "ராம்கோ" கூரைத்தகடுகள் வன்னியிலும் தடம்பதித்துள்ளது...

வன்னியில் "ராம்கோ" கூரைத்தகடுகள் விற்பனைக்கு முகவராண்மை பெற்ற

## பாண்டியன் வாணிபத்தினர்



**வன்னி மாவட்டங்களுக்கு வழங்குநர்களை நியமிக்கவுள்ளனர்.**

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் வினைத்திறனும், நன்மதிப்புமுள்ள வாணிபத்தினர் , வழங்குநர் பணியைப் பெறுவதற்கு எம்மிடம் உடன் தொடர்பு கொள்ளவும்.

வழங்குநர்களுக்கு சிறப்புச் சலுகைகள் உண்டு.

**"ராம்கோ" உங்கள் காவலன்.**

தொடர்புகட்கு: **பாண்டியன் வாணிபம்,**
கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

(சி-8059)

# பாக்தாத் நகர வீதிகளில் சதாம் நடமாட்டம்; வெளியான தகவல்களால் அமெரிக்கா குழப்பம்!

**ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் பாக்தாத் நகர வீதிகளில் சாதாரணமாக நடமாடி மக்களையும், படையினரையும் சந்தித்து உரையாடி அவர்களை உற்சாகப்படுத்தினார். இதனால் அமெரிக்கா மிகுந்த குழப்பமடைந்துள்ளது.**

பாக்தாத்திற்குள்ளும் பாக்தாத் திற்கு அருகேயும் கடும் சமர் இடம் பெற்று வருவதாக அமெரிக்க கூட்டுப்படைத்தரப்பு தொடர்ச்சி யாக செய்திகளை வெளியிட்டு வரும் நிலையில் சதாம் ஹுசை னின் மக்கள் சந்திப்பு தொடர்பான தகவல்களால் பெரும்குழப்பமேற் பட்டுள்ளது.


சதாம் ஹுசைன் நேற்று முன் தினம் திடீரென பாக்தாத் வீதிக ளில் தோன்றி மக்களையும் படையின ரையும் உற்சாகப்படுத்தி னார். இதனை ஈராக் தொலைக் காட்சி ஒளிபரப்பியது.

இந்தச் சந்திப்புக்களில் கூட்டுப் படைகளை ஆவேசமாக எதிர்க்க வேண்டும் என அவர் மக்களுக்கு அறைகூவல் விடுத்ததாகவும் இத னால் மக்கள் மிகுந்த உற்சாகம் அடைந்துள்ளதாகவும் தொலைக் காட்சி மேலும் குறிப்பிட்டது.


இந்தத் தகவல் தொடர்பாக அமெரிக்கா தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஹரிபிளஸ்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த தொலைக்காட்சிப் படம் எந்த இடத்தில் எப்போது எடுக்கப்பட்டது என்பது பற்றி தெரியவில்லை என்றாலும் இதன் நம்பகத்தன்மையை அறிந்துகொள் வதற்காக குறித்தவிடயம் தொடர் பாக பதிவுசெய்யப்பட்ட ஒளி நாடா தொழில் நுட்ப ஆய்வுக்காக அனுப்பிவைக்கப்பட் டிருப்பதாவும் அவர் குறிப்பிட்டார்.

இது இவ்வாறிருக்க ஈராக்கி னால் வெளியிடப்பட்ட மற்று மொரு தகவலாலும் அமெரிக்கா குழப்பமடைந்துள்ளது. அமெரிக்க கூட்டுப்படைகள் மீது மரபுசாரா வகையிலும் தாக்குதல்கள் நடத் தப்படும் என ஈராக் வெளியிட்ட தகவலால் அமெரிக்க கூட்டுப்படை யினர் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.



பாக்தாத் நகர வீதியொன்றில் கடமையில்ஈடுபடும் ஈராக்கிய படையினர்.



பாகிஸ்தானில் முஸ்லிம் மக்கள் வெள்ளிக்கிழமைதொழுகையின்பின் அமெரிக்க சனாதிபதிக்கெதிராக நடத்திய ஆர்ப்பாட்டம்

## அமெரிக்காவின் வற்புறுத்து!

ஈராக்கில் போருக்குப் பின் னான மறுவாழ்வுப் பணிகளில் ஐக்கிய நாடுகள்சபை ஈடுபடுவது அவசியமாகும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச் சர் கொலின்பவல் இதனைத் தெரிவித்தார்.

## நிவாரண பொதிகளின் நிறத்தை மாற்றுக!

### -யுனிசெப் கோரிக்கை

அமெரிக்க இராணுவ வீரர்கள் ஈராக்கியர்களுக்கு நிவாரண உதவியாக மஞ்சள் நிற உணவுப் பொட்டலங்களை வழங்கிவருகின் றனர்.

இதே நிறத்துடன் கூடியதான சிறிய ரகக் குண்டுகளும் பாக் தாத்தில் பாவிக்கப்பட்டு வருகின் றன. குழந்தைகள் இதனால் குண்டுகளையும் உணவுப்பொதி களைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடிய சாத்தியமிருப் பதாக ஐக்கிய நாடுகள் சபையின் 'யுனிசெப்' அமைப்பு அச்சம் தெரிவித்துள்ளது.

இந்த உணவுப் பொட்டலங் களின் நிறத் தையும் உடனடி யாக மாற்றுமாறு யுனிசெப் கோரிக்கை விடுத்துள்ளது.

## 'வீட்டோ' அதிகாரம் மீளப்பெறப்பட்டு ஐ.நா.சபை மாற்றியமைக்கப்பட வேண்டும்

### -இந்தோனேசியா துணை சனாதிபதி வேண்டுகோள்

(ஜகார்த்தா)

ஐநா சபையை முற்றாக மாற்றி யமைக்க வேண்டுமென்று இந்தோ னேசியா கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக ஐநா சபையில் வீட்டோ அதிகாரங்கள் ரத்துச் செய் யப்படவேண்டும் என்றும் அந்த அதிகாரங்களை வழங்கப்பட்டுள்ள நாடுகளிடமிருந்து மீளப்பெறப்பட வேண்டும் என்றும் இந்தோ னேசியா துணை சனாதிபதி ஹம்சா ஹாஸ் தெரிவித்துள்ளார்.

ஐநா வின் அதிகாரம் இல்லா மல் ஈராக் மீது போர் தொடுப்பதற்கு அமெரிக்காவிற்கு இந்தவீட்டோ அதிகாரமே காரணம் என்றும். அதனால் அமெரிக்கா முதலான நாடுகள் சட்டத்தைக் கையிலெ டுத்து சர்வாதிகார ஆட்சியை நடத்த தீர்மானித்திருப்பதானது ஐநா சபையின் அவசியத்தை இல்லாமல் செய்துவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



பஸ்ராவில் ஈராக்கிய சிறுவர்கள் பிரித்தானியப் படையினரால் கொடுக்கப்படும் தண்ணீரைச் சேகரிக்கும்காட்சி.



பாக்தாத்தின் அல்-கெயற் மருத்துவமனையில் கடந்த வியாழனன்று பிறந்த பெண் குழந்தையைத் தூக்கி வைத்திருக்கும் கன்னியாஸ்திரி ஒருவர்.

## பயங்கரவாதத்தை ஒழிக்க உறுதியளித்த பாகிஸ்தான் வெளிப்படையாக மீறுகிறது

### -ஐ.நா.வில் இந்தியா குற்றச்சாட்டு

பயங்கரவாதத்தை ஒழிப்பதாக உலக நாடுகளுக்கு உறுதி அளித் துள்ள வேளையிலும் பாகிஸ்தான் அப்பட்டமாக அதனை மீறி வருவ தாகவும் தீவிரவாதத்தின் ஊற்றுக் கண்ணாக அந்நாடு இருப்பதாகவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.நா.பாதுகாப்புச்சபையில் பயங்கரவாதம் தொடர்பாக நேற்றுமுன்தினம் விவாதம் இடம் பெற்றது இதில் உரை நிகழ்த்திய ஐநா வுக்கான இந்தியத் தூதுவர் விஜய் நம்பியார் பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு தொடர்ந்து ஆதரவு அளித்துவருவதாகவும் ஐ.நா.மற்றும் உலகநாடுகளுக்கு அளித்த உறுதிமொழியை மீறி தீவிரவாதிகளுக்கு ஊக்கமளித்து வருவதாகவும் குற்றம் சாட்டி யுள்ளார்.

அண்மையில் இந்தியாவில் 24பண்டிட் பிரிவு இந்துக்கள் படு கொலை செய்யப்பட்டதை சுட்டிக் காட்டிய நம்பியார் இதற்கு பாகிஸ் தானில் பயிற்சி பெற்ற தீவிரவா திகளே காரணம் என்று குறிப்பிட் டார்.

ஐ.நா.உறுதிமொழியை மீறும் பாகிஸ்தான் போன்ற நாடுகளை பாதுகாப்புச்சபை பட்டியலிட வேண்டும் என்று விஜய்நம்பியார் குறிப்பிட்டார்.

எனினும் இந்தியாவின் இந்தக் கூற்றை பாகிஸ்தான் பிரதிநிதி அன்வர் அக்ரம் மறுத்துள்ளார்.

## அதிரடி மாற்றம்

அகில இந்திய காங்கிரஸ் கட்சி யில் சோனியா காந்தி அதிரடி மாற்றங்களை செய்யவுள்ளார்.

இது தொடர்பாக கடந்த வாரம் அவர் கட்சித்தலைவர்களைக் கூட்டி ஆராய்ந்துள்ளார். மாநிலத்தேர்தல் கள் இடம்பெறவுள்ளதையடுத்தே இம்மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

## சிரியா, ஈரான் தாக்கப்படமாட்டாது!

(லண்டன்)

சிரியாவையும், ஈரானையும் தாக்கும் எண்ணம் அமெரிக்கா வுக்கு இல்லை என பிரிட்டிஷ் பிரதமர் ரோனிபிளேயர் கூறியுள் ளார்.

ஈராக் பிரச்சினையில் இந்த நாடு கள் தலையிட்டு வருவதாக அமெ ரிக்கா குற்றம் சாட்டியுள்ள நிலை யில் பிரிட்டிஷ் பிரதமர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

ஈராக்போருக்குப்பின்னர் மேற் கொள்ளப்படும் நடவடிக்கை களிற்கு ஈராக் மக்கள் முழுமை யாக ஈடுபடுத்தப்படுவார்கள் என் றும் குறிப்பிட்டார்.

போருக்குப்பின் ஈராக்கை புன மைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் ஐக்கியநாடுகள் முக்கிய பங்காற்ற வேண்டுமென்று ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் வலியுறுத்தியுள் ளன.

# பாகிஸ்தான் அணி முன்னணியில்; வெற்றிக்கு ஏங்கும் சிறிலங்கா!

## விளையாட்டு அரங்கு

- ஜெயந்திரன்

ஈராக்மீதான யுத்தம் ஆரம்பமாகிய நிலையில் கிரிக்கெட் முக்கோணபோட்டி இடம்பெறுமா என்ற சந்தேகத்திற்கிடையில் இதில் கலந்து கொள்ள முன்னர் திட்டமிட்டிருந்த தென்னாபிரிக்க அணி மறுத்துவிட்ட நிலையில் இப்போட்டி தற்போது முதல் தடவையாக நான்கு முனைப் போட்டிகளாக நடைபெற்றுவருகின்றன.

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் அரையிறுதிவரை முன்னேறிய சிறிலங்கா, கென்யா அணிகளும் இயற்கையின் உதவியுடன் பாகிஸ்தான் அணியைப்பின் தள்ளி சுப்பர் சிக்ஸ் போட்டிக்குள் நுழைந்த சிம்பாவ்வே அணியும் மேற்படி பின்னடைவைச்சந்தித்த பாகிஸ்தான் அணியும் கலந்துகொள்கின்றன. இது ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான போட்டியாகவும் அமைந்துள்ளது.

நடந்துமுடிந்த உலகக்கிண்ணப் போட்டியில் ஏற்பட்டபின்னடைவுகள் இவ்வணிகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தி புதுமுகங்களை அணியில் இணைத்து விளையாடும் நிலையில் கிண்ணத்தைக் கைப்பற்றும் அணி எது என்பதில் போட்டித்தன்மை எதிர்பார்க்கும்அளவுக்கு இடம்பெறுமா என்பது கேள்வியே.

எனினும்நடைபெற்று முடிந்த இரு போட்டிகளில் சிம்பாவ்வே, சிறிலங்கா அணிகளைத்தோற்கடித்த பாகிஸ்தான் அணி தனது இளம்புயல்களுடன் பிரகாசித்து வருகின்றது. எட்டு சிரேஷ்ட வீரர்கள் அணியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் இச்சுற்றுப்போட்டியில் எந்த அதிசயத்தையும் எதிர்பாராதீர்கள் என தாய்நாட்டில் இருந்து புறப்படும் போது தமது ரசிகர்களுக்கு வாக்கு வழங்கிய பாகிஸ்தான் அணி பலமான அணியெனக் கருதப்பட்ட சிறிலங்கா அணியை நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றதன் மூலம் தமது தற்போதைய அணி எதற்கும் சளைத்தது அல்ல என நிரூபித்ததுடன் இப்போட்டியில் இரு வெற்றிகளுடன் இறுதிப்போட்டியில் இடம்பெறும் தகுதியைப் பெரும்பாலும் பெற்றுவிட்டதென்றே கூறலாம்.

இச்சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான், சிம்பாவ்வே அணிகளுக்கு மூன்று போட்டிகளும் கென்யா, சிறிலங்கா அணிகளுக்கு இரு போட்டிகளும் வழங்கப் பட்டுள்ள நிலையில் இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் மற்றைய அணி எது என்பதில் கடும் போட்டித்தன்மை ஏனைய மூன்று அணிகளுக்கிடையில் நிலவும் என எதிர்பார்க்கப்படு கிறது.



உலகக்கிண்ணப் போட்டியில் சிம்பாவ்வே,சிறிலங்கா அணிகளைத் தோற்கடித்து அரையிறுதி வரை முன்னேறிய கென்யா அணி இப்போட்டித்தொடரிலும் இவ்வணிகளுக்கு நெருக்கடிகளைக். கொடுக்கும் என்றே எதிர்பார்க்கப்படு கின்றது.

சிறிலங்கா அணியைப் பொறுத்தவரையில் அவர்களின் அதிரடி ஆட்டம் சோடை போனநிலையில் எதிரணியினர் நிர்ணயிக்கும் ஓவருக்கு 5 என்ற ஓட்ட எண்ணிக்கையைக் கூட எட்டமுடியாது திணறிவருகின்றது. இது அவ்வணியின் மனநிலையை பெரிதும் பாதித்துள்ளது. இந்நிலையில் அணியின் மத்தியவரிசை ஆட்டக்காரர்களான மகேலஜெயவர்த்தன, ரசல் ஆனோல்ட் ஆகியோர் நீக்கப்பட்டு புதுமுகங்கள் சேர்க்கப்பட்டன. ஆனால் எது நடந்தாலும் சிறிலங்கா அணியைப் பொறுத்தமட்டில் நம்பிக்கைக்குரிய அணிகளில் ஒன்று என்ற நிலையை இழந்துவருவதாகவே கிரிக் கெட் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

அதாவது, நேற்று முன்தினம் பாகிஸ்தானுடனான போட்டியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அனுபவம் குறைந்த பாகிஸ்தானின் ஆரம்ப பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாது ஆட்டம் இழந்தமை மற்றும் ஓட்டம் பெறுவதில் ஏனைய வீரர்கள் சிரமத்தை எதிர்நோக்கியமை போன்றன சிறிலங்கா அணியைப் பெரும்பின்னடைவுக்கே இட்டுச்சென்றுள்ளது.

அத்துடன் பந்துவீச்சில் சுழற்பந்துவீச்சாளர் முரளிதரன் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் ஆகியோரைத் தவிர ஏனையோர் தமது திறமையை வெளிக் காட்ட தவறுவதால் போட்டியில் திருப்பு முனைகளை ஏற்படுத்த முடியாது திணறிவரும் சிறிலங்கா அண்மைக்காலமாக இந்நெருக்கடியில் இருந்துமீள்வதாகத் தெரியவில்லை. இது ஒட்டுமொத்த அணியையும் பாதித்துள்ளதுடன் அணித் தலைவர் ஜெயசூரியாவை அணித்தலைவர்



பொறுப்பில் இருந்து இராஜினாமாச் செய்யும் அளவுக்கும் சென்றுள்ளது.

பாகிஸ்தான் புதிய அணி ஆரம்பமே வெற்றி, உத்வேகம் என்று களத்தில் பிரகாசிக்க சிறிலங்கா அணிக்கு தோல்வியே எஞ்சியது.

பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு, வீரர்களுக்கிடையிலான புரிந்துணர்வு என்பவற்றில் புதுப் பொலிவு பெற்றுள்ள பாகிஸ்தான் அணி எதிரணியினரை வீழ்த்துவதில் வெற்றியும் கண்டு விட்டது. இது அவ்வணியின் தெரிவுக்கு கிடைத்த வெற்றியாக அமைந்துள்ளதுடன் நிலைத்து நீடிக்கும் அணியாகவும் மாறியுள்ளது அவ்வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் உட்பட யூனிஸ்கான், யுஹானா, லத்தீப் ஆகியோர் துடுப்பாட்டத்தில் காட்டிவரும் திறன் அவ்வணியைப் பலமான நிலைக்கு இட்டுச் செல்வதுடன் காலப் போக்கில் சிறந்த அணியாக மிளிர வழிவகுக்கும் எனத்துணிந்து கூறலாம்.

# உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாறு

வட்ட வடிவமான இப் பூமிக் கண்டத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் கோடிக் கணக்கான ரசிகர்களின் கண்களும் காதுகளும் ஒருங்கே காத்துக் கொண்டிருப்பது என்றால் அது நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்டமாகத்தான் இருக்கும்.

இப்படிப்பட்ட ஒரு உலக உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகள் எப்படி ஆரம்பித்தன, எங்கு ஆரம்பித்தன என்பதே ஒரு சுவையான வரலாறாகும்.

இன்று மிகப் பெரியளவில் 180 நாடுகளுக்கு மேல் இப்போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பித்து வந்தாலும் 1930ஆம் ஆண்டு முதல் உலக வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டிகள் தென்னமெரிக்காவின் உருகுவே நாட்டில் அங்குரார்ப்பணம் ஆனபோது 13 நாடுகள் மட்டும் கலந்துகொண்டன.

இன்று உலகத்தை நாம் நினைத்தவுடன் பார்த்துவிடலாம். ஆனால் அன்று பயணச் செலவுகளையும் தங்குமிட செலவுகளையும் கூட போட்டி நடக்கும் நாட்டினரே மேற்கொள்ள இருந்தும் ஒரு வழிப் பயணத்திற்கே மூன்று வார கடற் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய சிரமத்தை ஏற்றுக்கொள்ள, சகித்துக் கொள்ள விரும்பாததால், ஐரோப்பிய நாடுகள் நான்கு மட்டுமே இப்போட்டியில் கலந்துகொள்ள முன்வந்தன. அதிலும் பெரும்பான்மையான விளையாட்டுக்களுக்கு சட்டவிதிகளை அமைத்த இங்கிலாந்து கூட 1927இல் பயில்முறை விளையாட்டு வீரர்களுக்கு சம்பளம் மற்றும் செலவீனங்களுக்காக வழங்கிய பண பட்டுவாடா முறையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் உலக உதைபந்தாட்ட சம்மேளனமாகிய **FIFA** விலிருந்து தன் அங்கத்துவத்தை துறந்துவிட்டு ஒதுங்கி நின்ற இங்கிலாந்து இப்போட்டியை ஏற்றுக்கொள்ள வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



1904ஆம் ஆண்டு உதைபந்தாட்ட சம்மேளனம் **(FIFA)** ஆரம்பிக்கப்பட்ட போது இன்று போல தொழில் நுட்ப முறையிலான விளையாட்டு வீரர்களைக் கொண்டிராது பயில்முறை (சம்பளமற்ற) ஆட்டக்காரர்களைக் கொண்டே இயங்கியதைக் குறிப்பிடலாம்.

இப்போட்டிகள் ஆரம்பிக்கும் முன்னால் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய நாட்டு அணியினரே சாம்பியனாகக் கருதப்பட்டு வந்தனர். அவ்வேளையில் 1924ஆம் ஆண்டிலும் 1928ஆம் ஆண்டிலும் உருகுவே நாடு அச்சிறப்பைப் பெற்றது. ஆனால் ஐரோப்பா, தென்னமெரிக்கா நாடுகளில் உள்ள தொழில்முறை உதைபந்தாட்ட கழகங்களின் எழுச்சி மிகு வளர்ச்சியால் உதைபந்தாட்ட சம்மேளனம் உலக உதைபந்தாட்டக் கிண்ணப்போட்டி என்ற கனவை நனவாக்கியது.

அந்த வகையில் 1928இல் உலக உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராகிய ஜீல் றிமிற்றும் பிரெஞ்சு உதைபந்தாட்ட அமைப்பின் பொதுச் செயலாளரான ஹென்றி டெலுனேயும் ஒரு வெற்றிக் கிண்ணத்தை முன்மொழிந்ததைத் தொடர்ந்து பிரெஞ்சு நாட்டின் சிற்பியான அல்பேற் லப்லேர் வெற்றிக் கிண்ணத்தை வடிவமைக்க வேண்டிக்கொள்ளப்பட்டார்.

அந்த வருடமே அதாவது 1929ஆம் ஆண்டிலே எந்த நாட்டில் போட்டி நடத்துவது என்று சம்மெளனத்தால் தீமானிக்கப்பட்டதுடன் ஆறு வருடத்திற்கு முன்னரே எந்த நாடடில் நடத்துவது என்ற தீர்மானம் எடுப்பதாக உருவாகியது.

இந்த முதல் போட்டியை நடாத்த



இத்தாலி, ஒல்லாந்து, ஸ்பெயின், சுவீடன் ஆகிய நாடுகள் விண்ணப்பித்தும் உருகுவே நாட்டின் 100ஆவது சுதந்திரதின விழாவை கொண்டாடும் முகமாக உலக நாடுகளை உருகுவே அழைக்க விரும்பியதாலும் விண்ணப்பித்த ஐரோப்பிய நாடுகள் உருகுவேக்காக தங்கள் விண்ணப்பங்களை வாபஸ் பெற்றுக்கொண்டன.

# வீதி ஒழுங்கு முறைகளை கடைப்பிடித்து விபத்துக்களை தவிர்க்க முன்வருக!

## -நகர போக்குவரத்துப் பிரிவு வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

**ஏ-9 பிரதான வீதியில் இடம்பெறும் வீதி விபத்துக்களை தவிர்க்க வீதி நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறும் அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறும் தமிழீழ காவல் துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவு பொது மக்களுக்கு வேண்டுகை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்று பின்வருமாறு:

தற்போதைய சூழலில் ஏ-9 பாதையில் சிறிய ரக வாகனங்கள் தொடக்கம் கனரக வாகனங்கள் வரை தினமும் பயணம் செய்கின்றன. இவ் வாகனங்களின் எண்ணிக்கை வேகம் என்பவற்றுக்கேற்ப ஏ-9 பாதை இன்னமும் செப்பனிடப்படவில்லை. அத்துடன் வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்களும் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் வரும் மக்களுமாகப் பெரும் எண்ணிக்கையானோர் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் பயணம் செய்கின்றனர். அத்துடன் ஏ-9 பாதையில் பல பாடசாலைகளும் இயங்குகின்றன. பல நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களும் இப்பாதையைத் தினமும் பாவிக்கின்றனர். இவ்வாறான சூழலில் அண்மைக் காலத்தில் பல வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இதில் எமது மக்கள் பலரின் உயிரும் பலிகொள்ளப்பட்டுள்ளது. பலர் காயமடைந்தும் உள்ளனர் சொத்திழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இதில் குறிப்பாக பாடசாலை மாணவர்களும் வயோதிபர்களும் அடங்குகின்றனர். இவ் வீதி விபத்துக்களை முற்றாகத் தடுத்து நிறுத்தி எமது மக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எமக்குள்ளது. எனவே பின்வரும் வழிகளில் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கி வீதி விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளுமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

- துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் போது பக்கம் பக்கமாகச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்களில் செல்லும் போது பின்னால் திரும்பி பார்த்துக் கொண்டு முன்னால் வாகனங்களை செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளவும்.
- சிறு வீதிகள், ஒழுங்கைகளில் இருந்து பிரதான வீதிக்கு வரும்போது உங்கள் வாகனங்களின் வேகத்தை குறைத்து பிரதான வீதியின் இரு பக்கங்களையும் அவதானித்த பின்னர் பிரதான பாதையின் வலது பக்கம் வரும் வாகனங்கள் சென்ற பின் பிரதான பாதைக்குள் பிரவேசியுங்கள்.
- உங்களின் முன்னால் செல்லும் வாகனங்களை முந்திச் செல்ல வேண்டுமாயின் அவசரப் படாமல் போதிய இட வசதி ஏற் படும் போது முந்திச் செல்லவும்.
- வேகத்தடுப்பு இல்லாத வாகனங்களை எடுத்துச் செல்வதை முற்றாகத் தவிர்க்கவும்.
- மதுபோதையில் வாகனம் செலுத்துவதை முற்றாகத் தவிர்க்கவும்.
- பாதைகளில் குறிப்பிடப் பட்டுள்ள வேக அளவிற்கு அதிகமாக வாகனங்களைச் செலுத்த வேண்டாம்.
- பாடசாலைப் பிள்ளைகள் வீதிகளைக் கடக்கும் போது உங்கள் வாகனங்களை நிறுத்தி அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செல்லவும்.
- இரவு நேரங்களில் உங்கள் வாகனங்களின் பிரதான வெளிச்சம் பாய்ச்சிகள் (கெட்லைட்) இரண்டின் செயற் பாட்டில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டும் இல்லாது பயணம் செய்தல் வேண்டாம்.
- எதிரேவரும் வாகனத்திற்கு மங்கல் வெளிச்சத்தை(டிம்) மாற்றிச் செல்லவும்.

மேற்கூறிய விடயங்களை சரியான முறையில் கடைப்பிடித்து எமது மக்களின் உயிரையும் உடமைகளை பாதுகாப்போம்.

## வீடுகள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் இராணுவத்தினர் பயன்படுத்தி வந்த சில வீடுகளை உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

சாவகச்சேரி நுணாவில் சந்தியை அண்டிய பகுதிகளில் இருந்த எட்டுவீடுகளே உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

## அனுமதி வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

பளை மத்திய கல்லூரியில் க.பொ.த உ/த பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் அவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் வந்துள்ளமையால் வரும் 09-04-2003 அன்று வந்து உரியவர்கள் தவறாது பெற்றுக்கொள்ளும்படி பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (11)

## இராணுவத் தாக்குதல்களால் வலுவிழந்தோருக்கு நிதியுதவி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் வெடி பொருட்களாலும் இராணுவத்தின் செல்லடி மற்றும் விமானப்படையின் குண்டு வீச்சு கடற்படைத் தாக்குதல்களின் போதும் வலுவிழந்த 10 மாணவர்களுக்கும் 10 வலுவிழந்தோருக்குமாக மொத்தம் 20பேருக்கு வெண்புறா, யுனிசெப் நிறுவனம் 90 ஆயிரம் ரூபாவினை வழங்கியுள்ளது.

ஒரு மாணவனுக்கு 3000ரூபா வீதம் 10 மாணவர்களுக்கு 30000 ரூபாவும் தொழில் முயற்சிக்காக 6000 ரூபா வீதம் 10 குடும்பத் தலைவர்களுக்கு 60000ரூபாவினையும் கடந்த புதனன்று தாளையடியில் உள்ள வெண்புறா அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (11)

## வடமராட்சி கிழக்கில் வீதி திருத்தும் இடம்பெறாமையால் மக்கள் விசனம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மாமுனை தொடக்கம் கட்டைக் காடு வரையான வீதியை திருத்தத் திட்டமிடப்பட்டு அதற்கான ஆரம்ப வேலைகள் இடம்பெற்றிருந்தும் பின்னர் அதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்படாமையால் மக்கள் விசனமுற்றுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப. வேலாயுதம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின்போது நிக்கொட் மற்றும் உலக உணவு ஸ்தாபனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட போது அன்றைய தினம் மாமுனை தொடக்கம் கட்டைக் காடு வரையான 19.19 Km வீதியினை 32.7மில்லியன் ரூபா நிதியின் மூலம் புனரமைப்பது என்றும் அதற்குரிய நிகழ்ச்சித் திட்டத்தினை தயாரித்தனர். அத்துடன் அன்று பகல் 11.30 மணிக்கு மாமுனையில் நாள் வேலை (வீதிபுனரமைப்பு வேலை) யும் செய்யப்பட்டது. அந்த வேலையை உலக உணவுத் திட்டம் ஐக்கிய நாடுகளின் பிரதிப் பணிப்பாளர் ஹெகான் ரொன்கூல் ஆரம்பித்து வைத்தார்.

இந்த வீதியானது கூடுதலாக மணல் வீதி என்பதால் கடற்தொழிலாளர் சங்கங்களிடம் வீதி புனரமைப்பு வேலையை உலக உணவு ஸ்தாபனம் ஒப்படைத்தது. அவர்களுக்கு அதற்கு உணவுப் பொருட்கள் வழங்குவது என்று அதற்கான வீதி புனரமைப்பு பயிற்சிப் பட்டறை வகுப்புக்களையும் நடத்தின. சில பகுதிகள் கல்லுறோட்டுகள் என்பதனால் அவை வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டன. இருந்தும் இன்றுவரை நிக்கொட் நிறுவனமோ அல்லது உலக உணவு ஸ்தாபனமோ இன்னும் வந்து ஒருவருடனும் இதற்கான (கடற்தொழிலாளர் சங்கம்) ஒப்பந்தத்தினையும் செய்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதிகள் கரையோரக் கிராமங்கள் என்பதனால், தற்போது மீன்பிடித்தொழில் அதிகரித்துள்ளமையால் இப்பிரதேசத்தில் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளது. இவ் வீதிகள் திருத்தி அமைக்கப் படாமையால் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள். ஆகவே இவ் வீதிகள் எப்போது திருத்தப்படும் என்றும் இப்பிரதேச மக்கள் விசனம் அடையும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளார்கள். இப்பகுதியில் 5000 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

## அன்னை பூபதி நினைவாக சிரமதான நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

அன்னை பூபதியின் நினைவு நாளையும் நாட்டுப்பற்றாளர் நாளையும் முன்னிட்டு உருத்திரபுரம் பகுதியில் மக்களால் சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உருத்திரபுரம் கூழாவடிப் பகுதியில் பொதுச் சந்தை வளாகமும் அப்பிரதேச மக்களால் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டது மற்றும் சிவநகர் சிவன் சோலைப்பகுதியிலும் அப்பகுதி மக்களினால் கிராம சேவை அலுவலர் அருந்தமிழ்ச் செல்வன் தலைமையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. (சோ)

## இரு இடங்களில் இயங்கும் பாடசாலையின் அவலநிலை

(அலுவலக செய்தியாளர்)

[illegible]க்காய் கல்வி வலயத்தின் [illegible]ங்கும் நட்டாங்கண்டல் [illegible] பாடசாலை பெரும் இடர்[illegible]ளை எதிர்நோக்கிய [illegible] இயங்கிவருகின்றது.

மேற்படி பாடசாலை ஆரம்ப வகுப்புக்கள் நட்டாங்கண்டல் பகுதியிலும் ஏனைய வகுப்புக்கள் சிறாட்டிகுளம் வீதியில் உள்ள தற்காலிக கொட்டகைகளில் இயங்கிவருவதனாலும் இவ்விரண்டு இடங்களும் 05 கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பதனாலும் பாடவேளைகளில் ஆசிரியர்கள் தொடக்கம் மாணவர்கள் வரையும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளன.

அத்தோடு இவ்விரு இடங்களில் குடிநீர் வசதி மற்றும் மலசலகூட வசதிஎன்பன இல்லாத நிலையிலும் தற்காலிக கொட்டகைகளிலேயே இயங்கிவருகின்றது.

## வட்டக்கச்சி மருத்துவமனையில் 2775பேர் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளி.வட்டக்கச்சி மத்திய மருந்தகத்தில் கடந்த மாதம் 2775 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் மலேரியா, வயிற்றோட்டம், சிரங்கு, குருதிச்சோகை போன்ற நோய்களுக்கு கூடிய நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். உள்நோயாளர் பகுதியில் 33 பேர் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவ் வைத்தியசாலை வளாகம், கிராமசேவையாளர் ரூபசிங்கம் தலைமையில் மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## கூட்டுறவுச் சங்க கிளையின்றி மக்கள் பெரும் அவலம்!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க கிளை இல.04 திறக்கப் படாமையால் வேம்படி வாழ் மக்களும் வத்திராயன் தெற்கு வாழ் மக்களும் ஒரு மைல் தூரம் சென்று உடுத்துறைகிளை இல. 5இலும் வத்திராயன் கிளை இல. 3இலும் தமது நிவாரணப் பொருட்கள் மற்றும் அத்தியவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

மக்கள் மீள்குடியமர்ந்து ஒரு வருடம் முடிவுற்ற நிலையிலும் இன்னும் இந்தக் கிளை திறக்கப் படாமைக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்தக்கிளையில் சுமார் 100க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். மற்றும் வேம்படி வத்திராயன் தெற்கு கிராமங்களில் 120க்கு மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்தக் கிளைக்கு அருகாமையில்தான் உடுத்துறை மகாவித்தியாலயம் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்களுக்கு அருகில் வேறு எந்த விதமான கடைகளும் இல்லை எனவே, இக்கிளையும் திறக்கப்படாமையால் மாணவர்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றார்கள். (11)

## மாவட்ட மட்ட விளையாட்டு போட்டிகள் நேற்று ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்டவிளையாட்டுப் போட்டி நேற்று முதல் கிளி.இந்துக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இப்போட்டிகள் இன்றும் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# கிளி. மாவட்ட நீர்ப்பாசன குளங்களின் கீழான சிறுபோக நெற்செய்கை குறித்த அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கை தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.**

இதற்கமைவாக சில நீர்ப்பாசனக் குளங்களின் கீழான நெற்செய்கை அளவுகள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நீர் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் கால அட்டவணைகள் என்பனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அக்கராயன் குளத்தின் கீழாக 1804.5 ஏக்கரிலும், வன்னேரிக் குளத்தின்கீழாக 135 ஏக்கரிலும் கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழாக 245 ஏக்கரிலும் புதுமுறிப்புக்குளத்தின் கீழாக 394 ஏக்கரிலும், கனகாம்பிகை குளத்தின் கீழாக 57 ஏக்கரிலும் நடப்பு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளன என கிளிநொச்சி மாவட்டதமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன 2003ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற் செய்கை புள்ளிவிபர அறிக்கை தெரிவிக்கின்றது. (அ)

# போராளிகள்,பணியாளர்களால் துயிலும் இல்லம் சீரமைப்பு

(முள்ளியவளை)

தியாகதீபம் அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விடுதலைப் புலிகளின் சோதியா படையணிப் போராளிகளும் முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறைப்போராளிகள், பணியாளர்களினாலும் கடந்த 28-03-2003 தொடக்கம் தொடர்ச்சியான சிரமதான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி சிரமதான வேலைகளில் ஈடுபட்டுள்ள சோதியா படையணிப் போராளிகளில் ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில்; எம் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் வீரமுடன், தீரமுடன் களமாடி வீரகாவியமான மாவீரர்களை விதைத்துள்ள இம்மாவீரர் துயிலும் இல்லத்தில் தியாகி அன்னை பூபதி அம்மாவின் நினைவு நாளில் நாம் செய்யும் சிரமதான வேலைகளினால் எமது போராளிகள் மனநிறைவு அடைவர் எனத் தெரிவித்தார்.

## பதிவு செய்யவும்

முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் தங்கள் சுயவிபரத்தினை உடனடியாக புள்ளி விபரப் பகுதி, தமிழீழ நிர்வாக சேவை புதுக்குடியிருப்பு என்னும் முகவரியில் பதிவு செய்து கொள்ளுமாறு வேலை யற்ற பட்டதாரிகள் ஒன்றியம் கேட்டுள்ளது. அத்தோடு இது வரை காலமும் முல்லை. மாவட்ட மாணவர் ஒன்றியத்தில் பதிவு செய்யாத பட்டதாரிகளையும் தம்மிடம் பதிவு செய்து மாறு முல்லை. மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியச் செயலாளர் கேட்டுக்கொள்கிறார். (26)

# நெருக்கடிகளுடன் இயங்கும் பாடசாலையை இடமாற்ற நடவடிக்கை இல்லை!

## - கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிப்பு

(முள்ளியவளை)

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இயங்கிவருகின்றது.

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான வகுப்புக்களுடன் இயங்கிவரும் இப்பாடசாலையில் கட்டட வசதிகள் தளபாடப் பற்றாக்குறை காரணமாக இங்குள்ள மாணவர்கள் வேறுபாட சாலைகளுக்குச் செல்லும் நிலை உருவாகியுள்ளது.

கல்விச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் தரம் ஐந்து வரையான வகுப்புக்களைத் தனித்தனி அடைப்பு அறைகளில் நடத்தப்படவேண்டும். அத்தோடு மாணவர்களின் செயற்திறன் செயற்பாட்டு அட்டைகள் சான்றுகள் வகுப்பறைகளில் தொங்க விடப்படவேண்டும்.

ஆனால், இப்பாடசாலையில் கட்டட வசதிகள் அற்ற நிலையில் திறந்த வெளியில் மரநிழலில் மாணவர்களுக்கு கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதனால் மாணவர்கள் கற்றலை கிரகிக்க முடியாத நெருக்கடியும் மாணவர்களுக்குக் கற்பித்தலை மேற்கொள்ள முடியாத அவல நிலை ஆசிரியர்களுக்கும் உருவாகியுள்ளது.

சுமார் 300 மாணவர்கள் கல்வி கற்றுவரும் இப்பாடசாலையில் இரண்டு வகுப்பறைகளையும், அதிபர் அலுவலகத்தையும் உள்ளடக்கிய ஒரே ஒரு கட்டடம் மட்டுமேயுள்ளது ஏனைய வகுப்புக்கள் யாவும் மரநிழல்களிலும் அருகில் உள்ள தேவாலய மண்டபத்திலுமே நடாத்தப்பட்டு வருகின்றன.

முள்ளியவளை பிரதான வீதி ஓரமாக அமைந்துள்ள இப்பாட சாலையின் அவலமான நெருக்க டிகளைப்படுத்து வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்வதற்காக பட்டு நிக்கோட் நிறுவனத்தினால் 19 இலட்சம் நிதி கட்டட வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தும் பல மாதமாக எதுவித முயற்சி கூட மேற்கொள்ளப்படவில்லை.

எதிர்வரும் சித்திரைமாத முடிவுக்குள் இடமாற்றத்திற்காக சகல கட்டட வேலைகளும் முடிக்கப்பட்டு பாடசாலை இடமாற்றம் செய்யப்படுமென கடந்தமாதம் இப்பாடசாலையின் அதிபர் ந.இளஞ்சிங்கநாதன் எமது செய்தியாளரிடம் தெரிவித்திருந்தார். ஆனால் பாடசாலை இடமாற்றத்திற்கான பூர்வாங்க வேலைகள் எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கணபதிப்பிள்ளை சசீலன் இல. 853021822V கல்வயல் நுணாவில் சாவகச்சேரி, தேவராசா கென்றிக் கஜேந்திரா இல 741613506V சில்லாலை பண்டத்தரிப்பு ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (சோ)

## மக்கள் பயனடைவு!

(ஒட்டுசுட்டான்)

பேருந்து சேவை அதிகரிப்பால் மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் மாங்குளம் ஊடாக கடந்த 18ந்திகதி தொடக்கம் 2 பேருந்து சேவைகள் இடம் பெறு வதால் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், கரிப்பட்ட முறிப்பு,மணவாளன் பட்ட முறிப்பு, பனிக்கன்குளம், மாங்குளம் ஆகிய பகுதி மக்கள் பெரிதும் நன்மையடைவதுடன் உரிய நேரத்திற்கும் செல்லக்கூடிய வகையில் அமைந்துள்ளது. (05)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 10 - 1948



மறைவு 06 - 04 - 1998

அமரர்

**கந்தையா சிவசுப்பிரமணியம்**

**(முன்னாள் இயக்குனர் சபை உறுப்பினர் கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்)**

பெரிய பரந்தன்

பண்பின் நிறைவிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம் நெஞ்சில் குடிகொண்டகுலவிளக்கே
எம் உயர்விற்காய் உழைத்தோய்ந்த தெய்வமே
ஆண்டு ஐந்து ஆனாலும்
ஓயாது எம் துயரம்.

என்றும் பாசத்துடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், உறவுகள்.

(3058)

## வகுப்புக்கள் நடைபெறாது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் 8.4.2003 அன்று நடைபெறவிருந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி I ன் வகுப்புக்கள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடைபெற மாட்டாதெனவும் மேற்படி வகுப்பு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென சிரேஷ்ட விரிவுரையாளர் கி.சின்னராசா தெரிவித்துள்ளார். (சோ)


கிளிநொச்சி
ப.தெ.வ.அ.கூ.சங்கம்

# தலைமைக்காரியாலயம் இடமாற்றம்

எமது கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயம் நாளை 07.04.2003ந் திகதி தொடக்கம் கரடிப்போக்குச் சந்தியில் முருகன் ஸ்ரோஸ் கட்டடத்தில் (ஏ.கே.ஆர் கட்டடத்திற்கு அண்மையில்) இயங்கும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

பொது முகாமையாளர்,
கிளி/ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
கிளிநொச்சி.

(சி-8044)


# சாவு அறிவித்தல்

## அருணாசலம் வைரமுத்து

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் புளியம்பொக்கணை,கல்வெட்டித்திடலை வாழ்விடமாகவும் கொண்ட முன்னாள் கரைச்சி கிராமசபை உறுப்பினர் அருணாசலம் வைரமுத்து அவர்கள் 04.04.2003 வெள்ளிக்கிழமை அன்று இயற்கை எய்தினார். அன்னார் காலம் சென்றவர்களான அருணாசலம், சின்னப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலம் சென்ற இராசையா, காலம் சென்ற தம்பிஐயா, காலம் சென்ற இராசம்மா,வைத்திலிங்கம், ஐ.பாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் வனேஸ்வரன், இராசமணி, சிவபாக்கியம், சுந்தரலிங்கம், சிவபாலசி(கவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவிமலர், காலம் சென்ற குமாரலிங்கம், தியாகராசா, கலாராணி, யோகராசா (கனிஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் அவரது இல்லத்தில் 05.04.2003 நடைபெற்று தகனக்கிரிகைக்காக பி.ப மூன்று மணியளவில் நெடுமோட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
மகன் (வனேஸ்வரன்)

(2275)


# கண்ணிவெடி

## விழிப்புணர்வு வாரம்
## 01-07.04.2003

கண்ணிவெடிகள் வெடிபொருட்கள் சம்பந்தமான அடையாளக் குறியீடுகளை அலட்சியம் செய்யாதீர்கள். அவைகள்தான் உங்களின் வழிகாட்டிகள்.

யுனிசெப்.வெண்புறா நிறுவனம்

(சி-8043)



## சிந்தனைக்கு

நாம் ஒன்றுபட்ட மக்களாக ஒரே தேசிய சக்தியாக- அணிதிரண்டு,எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ளவேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 06-04-2003

## தற்பொழுது தேவையற்றது!

சமாதானத்திட்டம் குறித்து சிறிலங்கா இராணுவம் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதெனத் தீர்மானித்துள்ளமை ஒரு புறம் விடுதலைப்புலிகளுக்கு ஏமாற்றத்தையும் இன்னொரு புறத்தில் அதிருப்தியையும் கொடுத்துள்ளது.

நாட்டின் முக்கியமானதொரு பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படும் அரசாங்கம் மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறியும் நோக்கில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதென்பது தவறானதல்ல ஒன்று தான். ஆனால் இச்சர்வசனவாக்கெடுப்பினை அரசாங்கம் தனது அரசியல் தேவை கருதி நடத்துதல் என்பது ஏற்கத்தக்கதொன்றல்ல. ஒரு விவகாரம் குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதானால், ஒன்று அவ் விவகாரத்தைக் கையாளத் தொடங்கு முன்பு மக்களின் அபிப்பிராயம் எவ்வகையில் உள்ளது என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பை நடத்தலாம். அவ்வாறு இல்லாதுவிடில் ஒரு விவகாரத்தில் பேச்சுவார்த்தைமூலம் இறுதி முடிவை எடுத்த பின்னர் அம் முடிவு குறித்து மக்களின் கருத்துக்கணிப்பு ஒன்றை அரசாங்கம் நடத்தவிழையலாம். ஆனால், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் நற்பொழுது சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து எந்தவித அர்த்தமும் இல்லை.

ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும், இதனால் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காணவேண்டும் என்பதற்கு ஆதரவு தெரிவித்தே ஐ.தே.முன்னணி அரசாங்கத்தை மக்கள் ஆட்சிப்பீடம் ஏற்றினர். ஆகையினால் புலிகளுடன் நடைபெறும் பேச்சுவார்த்தை நடத்துவது சரியா என்பது குறித்த கருத்துக்கணிப்பு எதுவும் தேவையற்ற தொன்றாகும்.

இதேவேளை, பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகிவிட்டபோதும் இனப்பிரச்சினை குறித்து இறுதித் தீர்வெதுவும் இன்னமும் எட்டப்படவில்லை. ஏன், முக்கிய அரசியல் பிரச்சினைகள் இன்னமும் பேச்சுவார்த்தை மேசைக்கு எடுக்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

ஆகையினால், பேச்சுவார்த்தை மேசையில் காணப்பட்ட தீர்மானம் எதுவும் மக்கள் அங்கீகாரத்திற்கு வைக்கவேண்டிய நிலையிலும் இல்லை. அதாவது முக்கிய தீர்மானங்கள் எவையும் இதுவரை பேச்சு வார்த்தையில் எட்டப்படவில்லை. ஆகையினால் தற்பொழுது சர்வசன வாக்கெடுப்பினால் பெரும் பொருள்விரயத்தை தவிர வேறு எதுவித பயனும் கிட்டிவிடப்போவதில்லை.

இது ஒருபுறம் இருக்க, வடக்கு- கிழக்கின் இன்றைய சூழ்நிலை சர்வசன வாக்கெடுப்பு ஒன்றிற்கு ஏற்றதாகவும் இல்லை. அதாவது உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமாக பெருமளவான தமிழ் மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், சர்வசனவாக்கெடுப்பொன்றை நடத்துவதென்பது தமிழ்மக்களின் அபிப்பிராயத்தைக் கருத்திற்கொள்ளாது மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகவே இருக்கமுடியும். ஆகையினால் இக்கருத்துக்கணிப்பும் அர்த்தமற்றதொன்றாக- சிறிலங்கா அரசு தனது தேவைகளுக்காகச் செய்யப்பட்டதொன்றாகவே இருக்கமுடியும்.

இதனைத்தவிர வடக்கு – கிழக்கு பிரதேசத்தின் பெரும்பகுதியான நிலப்பரப்பும் பல லட்சம் மக்களும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். ஆகையினால் விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பைப் பெறாது சர்வசனவாக்கெடுப்பை நடத்துவதென்பது போலித்தனமான, ஏமாற்றுத்தனத்துடன் கூடிய தொன்றாகவே இருக்கமுடியும். இது அங்கீகரிக்கக்கூடியதொன்றல்ல.

ஆகையினால், அரசாங்கம் தற்பொழுது சர்வசனவாக்கெடுப்பொன்றை நடத்துமானால், உண்மையில் அது மக்களின் கருத்தறியும் ஓர் நடவடிக்கையாக இருக்கமாட்டாது. அரசாங்கத்தின் தேவை கருதியதொன்றாகவும் சமாதானப்பேச்சு வார்த்தையில் புதிய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவுமே இருக்க முடியும். ஆகையினால், அரசாங்கம் தனது முடிவைப் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமானதாகும். அவ்வாறு இல்லாவிடில் அரசாங்கத்தின் நோக்கம் குறித்து எதிர்மறையான நிலையில் சிந்திக்க வேண்டி ஏற்பட்டுவிடும்.

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் வைத்தியசாலை அமைக்கப்படவில்லை

### -சிகிச்சை பெறுவதில் மக்கள் பெரும் சிரமம

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு பிரதேசமான புளியங்குளம் பகுதியில் முன்பிருந்த மத்திய மருந்தகமும், மகப்பேற்று மனையும் இதுவரை புனரமைக்கப்படாதுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனால் மீளக் குடியமர்ந்து வரும் மக்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் பல கிலோமீற்றர் சென்று நயினா மடுவிலும், மாங்குளத்திலும் இயங்கும் திலீபன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

முன்னர் புளியங்குளத்தில் இயங்கிய அரசாங்க வைத்தியசாலை யுத்தத்தால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. அதே இடத்தில் மீள வைத்தியசாலையினை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டும் உள்ளதுடன் அதை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை அவ்விடத்தில் வைத்தியசாலை புனரமைப்பதற்குரிய நடவடிக்கை எவையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை இதனை அண்டிய கிராமங்களில் கண்ணி வெடிகளை விரைவில் அகற்றி உறுதிப்படுத்தவுள்ளதாகவும் மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளருக்குத் தெரிவித்துள்ளனர். (அ)

## மட்டக்களப்புக்கான நேரடி ரயில் சேவை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பிற்கான நேரடி புகையிரதசேவை எதிர்வரும் 12ஆம் திகதிமுதல் ஆரம்பமாகவுள்ளது.

முதல்சேவை இரவு 8மணிக்கு கொழும்பிலிருந்து ஆரம்பமாகும். மறுநாள் மட்டக்களப்பிலிருந்து மீண்டும் கொழும்பிற்கான புகையிரதசேவை நடைபெறும்.

போர் நெருக்கடிகளால் கடந்த1996 முதல் மட்டக்களப்புக்கான நேரடி புகையிரத சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது கொழும்பு கோட்டையிலிருந்து வாழைச்சேனை வரையுமே புகையிரதசேவைகள் இடம்பெற்று வருகின்றன.

# விமானப்படைக்குப் பயிற்சியளிக்க அமெரிக்காவிடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா விமானப் படையினருக்குப் பயிற்சியளிக்க அமெரிக்காவின் உதவி நாடப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தனது படைகளுக்கு அமெரிக்காவில் பயிற்சியளிக்க உதவுமாறு சிறிலங்கா அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்தகாலத்தில் ஏற்கனவே ஆயுத தளபாட உதவிகளை வழங்கியதுடன் பயிற்சிகளையும் வழங்கிவந்த அமெரிக்கா தற்போது இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சமாதான உடன்படிக்கையின் போது பயிற்சிகளை வழங்குமாறு சிறிலங்கா அரசு கோரியுள்ளமை மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# நாட்டின் துரோகி என்ற குற்றச்சாட்டின் கீழ் எமது ஆட்சியில் பீரிஸ் கைதாவார்

### - பொ.ஐ.மு. பா.உ. மங்கள சமரவீர

(கொழும்பு)

நாட்டின் துரோகி என்ற குற்றச்சாட்டின் பேரில் பொதுசன ஐக்கிய முன்னணியின் அரசாங்கத்தின் கீழ் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கைது செய்யப்படுவார் என பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் நேற்று முன்தினம் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, தனியார் மயத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு உதவி வழங்கப் பல நாடுகள் முன்வந்துள்ளன.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக்கென நிதி கிடைத்ததையிட்டு பொதுசன ஐக்கிய முன்னணி எதிர்ப்பு தெரிவிக்கமாட்டாது என மங்கள சமரவீரதெரிவித்துள்ளார் ஆனால் ஏனைய வெளி நாட்டின் உதவிகள், நீர், ரயில்வே, கல்வி ஆகியவற்றை தனியார் மயமாக்கும் முறையிலேயே பெறப்படுகின்றன எனத்தெரிவித்தார்.

# போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவை மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது!

### -அமைச்சரவைப் பேச்சாளர் பீரிஸ்

(கொழும்பு)

அரசாங்கம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை மேலும் பலப்படுத்த வேண்டும் என்பதையே வட-கிழக்கில் இடம்பெற்ற சில தாக்குதல் சம்பவங்கள் உணர்த்துவதாக சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய இருதரப்பினரும் நடந்து கொள்வதே இத்தகைய தாக்குதல் சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு சிறந்த வழியென்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடற்பரப்பில் தாக்குதல் எதுவும் ஏற்பட்டால் அவற்றை விசாரிப்பதில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித் துள்ளார்.

யாழ். குடாநாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மீள் குடியேற்றம் குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர், ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை கிடைத்தவுடன் மீள் குடியேற்றம் பற்றி ஆராயப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புத்திசாதுரியமான தலைமைக்காக கல்வித்துறையில் மாற்றங்கள் செய்தேன்!

### - சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

குறைவான கல்வி அறிவினைக் கொண்டு மிகவும் புத்தி சாதுரியம் மிக்க தலைமை ஒன்றை உருவாக்குவதற்காக கல்வித்துறையில் பல்வேறு மாற்றங்களை, தான் உருவாக்கியதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தையில் இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு அதிக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதன் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 158 ஆவது வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## அறிமுக கூட்டங்கள்

(அலுவலக செய்தியாளர்)

நியாப் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இலக்குக் கிராமங்கள் தொடர்பான அறிமுகக் கூட்டம் பரவலாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 9ம் திகதி கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவில் இலக்குக் கிராமங்களான, ஊரியான், தருமபுரம் மேற்கு ஆகிய கிராமங்களிலும், எதிர்வரும் 10ஆம் திகதி பிரமந்தனாறு மயில்வாகனபுரம், பெரியகுளம், ஆகிய இலக்குக் கிராமங்களிலும் அறிமுகக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இவற்றை நியாப்திட்ட பணிப்பாளர்கள்,நியாப்திட்ட உதவியாளர்கள்நியாப் திட்ட அலுவலர்கள் ஆகியோர் இணைந்து நடத்தவுள்ளனர். (அ)

# சமாதானத்தை விரும்பும் தமிழ்மக்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்கமாட்டார்கள்

## சத்தியாக்கிரக நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகரன்

இலங்கை வாழ் தமிழ்மக்கள் மற்றுமோர் யுத்தத்திற்கு தயாரில்லை எனவும் அதே வேளை தமது உரிமைகளை விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்பதையும் சர்வதேச சமூகம் உட்பட அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ. சந்திரசேகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சமாதானத்திற்கு ஆதரவு தெரிவித்தும், இனவாத சக்திகளின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று மலையக மக்கள் முன்னணியால் ஒழுங்குபடுத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானத்திற்கு எதிரான சக்திகளும், இனவாத அரசியல் குழுக்களும் ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்திக் கொண்டிருந்தால் இந்த நாட்டில் பெரும்பான்மையானவர்கள் சமாதானத்திற்கு எதிரானவர்கள் என்ற கருத்து வலுப்பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். காலை 8.00 மணிக்கு ஆரம்பமான இந்த சத்தியாக்கிரகம் மாலை 5.00 மணிக்கு நிறைவு பெற்றது. இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், சிறுபான்மை மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. அவர்களின் உரிமைகளை சிங்கள மக்கள் மதித்து நடக்கவேண்டும் என்றும் கூறினார்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, ரவிராஜ், அப்பாத்துரை வினாயகமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் பெருமளவான மக்களும் கலந்து கொண்டனர்.

# சனாதிபதியைச் சந்தித்து அமெ.தூதுவர் பேச்சு!

(லண்டன்)

சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் நேற்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின்போது ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் குறித்து அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும் அமெரிக்கத் தூதுவர் சனாதிபதிக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

சனாதிபதி கடந்த வாரம் சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் குறித்து அமெரிக்க சனாதிபதியை கடுமையாக விமர்சித்திருந்தது தெரிந்ததே.

# மருதங்கேணி உ.அ.அ. பிரிவில் மீளக்குடியமர்வு நிதி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கான மீள்குடியமர்வு நிதி, வரும் செவ்வாய் தொடக்கம் வெள்ளி வரை மருதங்கேணி சமுர்த்தி வங்கியில் வழங்கப்படவிருக் கின்றது. 8ஆம் திகதி முற்பகல் 11.00மணி முதல் 2.00 மணிவரை முள்ளியான் (ஜே/433) பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை போக்கறப்பு (ஜே/434), 9ஆம் திகதி முற்பகல் 9.00 - 12.30 மணிவரை உடுத்துறை (ஜே/430), பிற்பகல் 1.00 மணிமுதல் 3.00 மணி வரை வெற்றிலைக்கேணி (ஜே/432), 10ஆம் திகதி முற்பகல் 10.30மணி முதல் 12.30மணி வரை ஆழியவளை (ஜே/431), பிற்பகல் 1.00மணி முதல் 3.00 மணிவரை செம்பியன்பற்று வடக்கு (ஜே/426), பிற்பகல் 3.00 மணி முதல் 5.00 மணிவரை வத்திராயன் (ஜே/429), 11ஆம் திகதி முற்பகல் 9.30 மணி முதல் 12.30 மணி வரை செம்பியன்பற்று தெற்கு (ஜே/427) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வழங்கப்படவிருக்கிறது. (11)

### இந்தியா...

பேச்சு நடத்தவுள்ளார். மேலும், இந்திய சனாதிபதி அப்துல் கலாம், துணைப் பிரதமர் அத்வானி, நிதியமைச்சர் ஜஸ்வந்சிங், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கா எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரையும் சனாதிபதி சந்திரிகா சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

### நோர்வேயி...

ஆகியோர் பங்குபற்றினர்.

இவர்கள் நோர்வே பாராளுமன்றம், உயர்நீதி மன்றம் ஆகியவற்றுக்கும் விஜயம் செய்தனர். அத்துடன் இவர்கள் முன்னாள் போர்நித்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொண்ட் புரூவ் ஹொவ்டேயையும் சந்தித்தனர். அவர் இவர்களுக்கு ரீனாலியர் பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரிக்கு சுற்றுலா ஒன்றை ஒழுங்கு செய்து கொடுத்தார்.

இக்குழுவினர் இளைப்பாறிய பிரதம நீதியரசர் கார்ஸ்ரைன் கிமித் ஐ.நா.பிரதிநிதி குழுத் தலைவரும் ஒரேமசோ பல்கலைக்கழக பேராசிரியருமான ஒவில் ஹென்றிக்கையும் சந்திக்க இருந்தனர்.

# கிளி.யில் மின் உற்பத்தித் திட்டம் நேற்று ஆரம்பித்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

பொருண்மிய மதியுரையகம் ஜேர்மன் கிளையால் நிறுவப்பட்ட 10 கிலோவாற்ஸ் “காற்றாலை” மின்பிறப்பாக்கியுடன் இணைந்த சூரிய மின்கலத் தொகுதியுடனான மின் உற்பத்தித்திட்டம் நேற்று நண்பகல் 12.00 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொருண்மிய மதியுரையகத் திட்டமிடல் அலுவலர் அமிர்தலிங்கம் தலைமையில் பொருண்மிய மதியுரையக வட்டக்கச்சி நடுவப்பணியகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைக்க, பெயர்ப்பலகையினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

மின் உற்பத்தித்திட்ட நிலையத்தினை கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் நாடாவினை வெட்டித் திறந்து வைத்ததுடன் மின் பிறப்பாக்கியை விசை அழுத்தி ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் பொருண்மிய மதியுரையகப் பொறுப்பாளர் தாஸ், பொருண்மிய மதியுரையக ஜேர்மன் கிளை உறுப்பினர் றி.றொபேட் மற்றும் துறைசார் நிறுவன அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பிரதமர் ரணில் - கதிர்காமர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சிறிலங்கா சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சந்திப்பின்போது சமாதான முயற்சிகள் குறித்தும், சமாதான முயற்சிகளுக்கு பொ.ஐ. முன்னணியின் ஆதரவு குறித்தும் ஆராயப்பட்டன.

இச்சந்திப்பில் சமாதான முயற்சிக்கு பொ.ஐ.முன்னணியின் ஆதரவைப் பிரதமர் கோரியுள்ளார். அத்துடன் இந்த விடயங்கள் தொடர்பாக சனாதிபதியைச் சந்தித்துப் பேசவும் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

-இலவச மருத்துவ சிகிச்சை முகாம்-

# 5000க்கு மேற்பட்டோருக்கு இருநாட்களில் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்ற இலவச மருத்துவ சிகிச்சை முகாமில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக மருத்துவ அறிக்கைமூலம் தெரியவந்துள்ளது.

இவ்விரு நாட்களிலும் பல்வைத்திய சிகிச்சையினை 230 பேர் பெற்றுள்ளனரெனவும் இதரசிகிச்சையினை 5050பேர் பெற்றுள்ளரெனவும் மேற்படி அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

இது தவிர சிகிச்சை மேற்கொண்டு மருத்துவ சேவைபெறும் பொருட்டு பல நோயாளர்களுக்கு வவுனியா யாழ். வைத்தியசாலைகளுக்கும் வைத்திய அனுமதி வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

### பாக்தாத்...

தில் பொய்த் தகவல்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்கர்கள் கூறும் தகவல்களை தன்னால் உறுதி செய்ய முடியவில்லையென்று பாக்தாத்திலுள்ள பி.பி.சி. செய்தியாளர் கூறியுள்ளார்.

பாக்தாத் நகர மையத்தில் நாங்கள் இருக்கின்ற இடத்தில் அமெரிக்கப்படையினர் வந்துவிட்டதற்கான எந்த அறிகுறியும் இல்லை.றக் வண்டிகளில் ஈராக்கிய படையினர் பீரங்கிகளை இழுத்துக் கொண்டு பாக்தாத் நகர வீதிகளில் நடமாடுகின்றனர் என்று பி.பி.சி செய்தியாளர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, பாக்தாத்திலுள்ள சர்வதேச விமானநிலையத்தை அமெரிக்கப் படைகள் நேற்று முன்தினம் கைப்பற்றியதாக தகவல்கள் வெளியாகியிருந்த போதும், நேற்று வரையில் அங்கு கடும் சண்டை இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிந்திய செய்தியாக விமானநிலையம் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாக செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றபோதும் ஈராக்கிய தகவல் தொடர்பகம் இதனை நிராகரித்துள்ளது.

### சமாதானத்தைக்...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மிக முக்கியமாக இச் செயலமர்வில் நாங்கள் வலியுறுத்திய விடயமாவது, வட-கிழக்கில் வாழும் பெண்களின் இயல்பு வாழ்வு என்பது மீள்குடியேற்றத்தில் தான் தங்கியுள்ளது. இவர்கள் மிக நீண்ட காலமாக ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு முகம்கொடுத்து வந்தவர்கள். இதன் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் குழந்தைகளுமேயாகும். எனவே இவர்கள் மீண்டும் சொந்த இடங்களில் சென்று குடியமரும்போது தான் அவர்களின் அபிவிருத்தியென்பது முற்றுமுழுதாக சாத்தியமாகும்.

நாங்கள் இவ் உபகுழு கூட்டத்தில் இவ்விடயத்தை வலியுறுத்துவதன் காரணம் என்னவெனில், இவ்வழுத்தமானது உயர்மட்ட பேச்சுவார்த்தையில் முக்கிய அழுத்தத்தைக் கொடுக்கும் என்பதேயாகும்.

தற்போது யாழில் 42 வீதமான பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.. 58 வீதமான பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக மழைகாலத்திற்கு முன்பதாக மீள்குடியேற்றம் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதனை இங்கு வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

எம்மால் தயாரிக்கப்பெற்ற எதிர்கால செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள் அதற்கான முன்திட்டவரைபு இவ் உபகுழுவினால் ஏற்கப்பட்டுள்ளது.

மற்றும் சமாதானம் என்ற நிலையில் போர் ஓய்ந்துள்ளதேயொழிய மக்களின் இயல்புநிலை ஏற்படவில்லை என்பதனை எடுத்தியம்பியுள்ளோம். மற்றும் இவ் உபகுழுவிற்கான செயலகம் கிளிநொச்சியிலும், கொழும்பில் இதன் அலுவலகம் அமைப்பது தொடர்பாகவும் குழுவில் கலந்துரையாடியுள்ளோம்.

நாங்கள் இரு பகுதியினரும் கலந்து வேலைத்திட்ங்களை முன்னெடுபபது குறித்து கலந்துரையாடியுள்ளோம். யூன்மாதத்தில் மட்டக்களப்பில் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடத்தத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரு இனங்களுக்கிடையே இணக்கப்பாடு ஏற்படவேண்டும் என்று அரச தரப்பு பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் தென்னிலங்கை மக்களிடையேயே இந்த இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். அதற்கு அரச பிரதிநிதிகள் உந்து சக்தியாக விளங்கவேண்டும். இணக்கப்பாடுஎன்பது ஒரு அடிப்படையான, ஆழமான அரசியல் தீர்விலிருந்து தான் கட்டியெழுப்பப்பட வேண்டும் அந்த அரசியல் தீர்வு எமது மக்களுக்கு கிடைக்க வேண்டும். அடிப்படைஅபிலாசைகள் பூர்த்தியாகையிலேயே உண்மையான இணக்கப்பாடு கட்டியெழுப்பப்படுமென்றார். (சோ)

### மக்களின்...

ளர் பா.அரியநேத்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதல் பிரதியை மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் கேணல் கருணா அவர்களுக்கு வழங்கினார். முஸ்லிம் பிரமுகர் ரபீக் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றியபோதே மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள், மேற்கூறப்பட்டவாறு தெரிவித்தார். மேலும் அவர், இன்று ஊடகங்கள் வளர்ச்சியடைந்திருப்பது மட்டுமல்ல, சில சந்தர்ப்பங்களில் மக்களின் அவலங்களை வெளியிடாது ஆளும் வர்க்க நலன்களை பிரதிபலிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அச்சம் காரணமாக ஆரம்ப காலத்தில் ஊடகவியலாளர்கள் மௌனித்திருந்தனர். ஆனால் தற்போது தமிழ் ஊடகங்களும், ஊடக வியலாளர்களும் துணிச்சலுடன் செயற்பட்டு வருவதால் பல்வேறு அழிவுகளையும், அனர்த்தங்களையும் கூட தவிர்க்கக்கூடியதாகவிருக்கின்றன. அழிவுகளும், அனர்த்தங்களும் வெளியே கொண்டுவரப்படுவதால் எதிர்த்தரப்பினர் அதனைச் செய்வதில் அச்சம் கொண்டுள்ளனர் என்றார்.

மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் “தமிழ் அலை” பெயர்ப்பலகையினை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.